# திருகோணமலை வன்னியர்களின் அரசியல் அதிகாரப் போக்கு - ஒரு வரலாற்றுப் பார்வை

சு.சுதிர்சனா [#1], திருமதி. கௌரி லக்சுமிகாந்தன் [*2]

[#1] *உதவி விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

[*2] *சிரேஸ்ர விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

***ஆய்வுச் சுருக்கம்***

*இலங்கையின் மத்திய காலப்பகுதிகளில் தமிழர் வாழும் அனேகமான பிரதேசங்கள் வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சியின் கீழ் ஆளப்பட்டன. திருகோணமலைப் பிராந்தியத்தில் திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப் பற்று, தம்பலகாமப் பற்று, கொட்டியாரப் பற்று என்ற நான்கு வன்னிப் பற்றுக்கள் காணப்பட்டுள்ளன. பிரித்தானியர் ஆட்சி வலுப்பெறும் வரை இலங்கையின் அரசியல் வரலாற்றிலும், நிர்வாக முறையிலும் வன்னியர்கள் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்துள்ளனர். ஒரு பிரதேசத்தின் ஆட்சியாளர்கள் என்ற வகையில் வன்னிமைகள் பொருளாதாரத்தில் வளம் பெற்றே இருந்துள்ளனர். ஆட்சியதிகாரம், சமூக வழமைகள் பொருளாதார நிலை போன்றவற்றில் உயர்ந்ததொரு நிலையிலேயே இருந்துள்ளனர். எனினும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களின் கீழ் திருகோணமலை வன்னிமைகளின் சுதந்திரமான ஆட்சியானது பல சவால்களுக்குட்பட்டது. மத்திய காலம் முதலாகப் பரம்பரை பரம்பரையாக வன்னியர்கள் பதவி வகித்து வந்த போதிலும் பிற்பட்ட காலங்களில் பிரித்தானியர்களே வன்னிபங்களை நியமித்து வந்துள்ளனர். காலனித்துவ காலத்தின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இவர்கள் வரி செலுத்தியே வந்துள்ளனர். மேலும் ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டினுள்ளே வன்னிப் பற்றுக்கள் இருந்துள்ளன. ஆட்சியதிகாரத்திலும், சமூக வழமைகளிலும், பொருளாதார நிலையிலும் வன்னிமைகள் பெற்றிருந்த முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்து கொண்டே போயுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.*

***அருஞ்சொற்கள்:*** *வன்னியர், காலனித்துவம், பற்று*

## 1.1. ஆய்வு அறிமுகம்

இலங்கையில் புராதன காலம் முதலாக தமிழர்கள் அரசர்களாகவும் , குறுநில மன்னர்களாகவும் தங்களது பலமான ஆட்சியை ஏற்படுத்தியிருந்தனர் . அந்தவரிசையில் வன்னியர்கள் முக்கியமான வர்களாவர். இவர்கள் பொலன்னறுவைக் காலத்திலும் , அதன் பின்னரும் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்தவர்களாவர் . காலப்போக்கில் இலங்கையில் தமிழர் வாழும் அனேகமான பிரதேசங்கள் வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சியின் கீழ் ஆளப்பட்டன. பிரித்தானியர் ஆட்சி வலுப்பெறும் வ ரை இலங்கையின் சமூக , பொருளாதார, அரசியல் வரலாற்றிலும் , நிர்வாக முறையிலும் வன்னியர்கள் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்துள்ளனர்.

இலங்கையின் மத்திய காலத்தினைப் பொறுத்தவரையில் திருகோணமலை வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சியானது நான்கு வன்னிப்பற்றுக்களைக் கொண்டதாகக் கா ணப்பட்டுள்ளது. திருகோணமலைப் பிரதேசத்து வன்னிச்



© 2024, IRJTSR 

சிற்றரசர்கள் குறிப்பிடத்தக்க அளவில் சுயாட்சி உரிமைகளை அனுபவித்துள்ளனர் . இவர்கள் பிராந்தியத்தின் சமூக வழமைகளிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தனர் . ஐரோப்பியர்களின் வருகையினால் வன்னியர்களின் செல்வாக்கில் ; மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டன.

திருகோணமலை வரலாற்றில் வன்னிபங்களின் உற்பத்தி பற்றியதான காலத்தை சரியாக வரையறை செய்ய முடியாதுள்ளது . கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவைச் சேர்ந்த கலிங்க மாகோனின் ஆட்சிக் காலத்திலே பெருமளவில் வன்னியர்கள் உட்பட அநேக தமிழ்க் கு டியினர் ஈழத்திற்கு அழைத்து வரப்பட்டனர் என்பதனை இரு நாட்டு ஆய்வாளர்களும் குறிப்பிடுகின்றார்கள் . ஈழத்தில் மாகோனது ஆட்சிக் காலம் (கி.பி 1215 – 1255) சுமார் 40 வருடங்களாகும். கலிங்க மாகோனின் உபராஜாக்களில் முக்கியமானவனாகக் கருதப்படும் குளக்கோட்டனின் ஆட்சியில் தி ருகோணமலையும் அதன் வட பிரதேசங்களும் இருந்த போது அங்கு கோயில்களைத் திருத்தி , கோயிற் திருப்பணிக்காக மக்களையும், அவர்களைப் பராமரிக்க தமிழகத்திலிருந்து வன்னியர்களை அழைப்பித்துக் குடியேற்றியுள்ளான் என கோணேசர் கல்வெட்டு முதலானவற்றில் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையிற் சோழராட்சி நிலவிய காலத்திலே புனர்நிர்மானம் பெற்ற கோணேசர் கோயிலைப் பாதுகாப்பதற்கென்று வேளைக்காறருக்கு நியமனம் வழங்கும் ஏற்பாடுகளின் மூலம் திருகோணமலை வன்னிமை உற்பத்தியானதென்று பத்மநாதன் கருதுகின்றார் (பத்மநாதன், 2002:173, 174).

### 1.2. ஆய்வின் நோக்கமும் அணுகுமுறையும்

திருகோணமலை பிராந்தியத்தினை மையமாகக் கொண்டு நடைபெற்ற வன்னிச் சிற்றரசுகள் பெற்றிருந்த அரசியல் அதிகாரப் போக்கை கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும். கடந்தகால நிகழ்வுகளை விரிவாக ஆய்வு செய்வதற்கு உகந்த வரலாற்றியல் ஆய்வு முறை பயன்படுத்தப்படுவதுடன், திருகோணமலை வன்னிச் சிற்றரசர்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அத்தகவல்களின் உண்மைத் தன்மையினை முதன்னிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### 1.2. ஆய்வு மூலங்கள்

ஒரு நாட்டின் அல்லது குறிப்பிட்டதொரு பிராந்தியத்தின் வரலாற்றை தக்க சான்றுகளோடு வெளிக்கொண்டு வருவதில் மூலாதாரங்களுக்கு பங்குண்டு. களவாய்வினூடாகப் பெறப்பட்ட மட்டக்களப்பு கிராமங்களில் வழக்கிலுள்ள கண்டி இராசதானி தொடர்பான வாய்மொழிக் கதைகள் இவ்வாய்வின் பிரதான மூலங்களாகும். இரண்டாம் நிலைத் தரவுகளாக வாய்மொழிக் கதைகள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள தகவல்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 2.0 மத்திய கால அரசியலில் வன்னிபங்களின் நிலை

குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோயிலில் தொழும்பு செய்வதற்காக இந்தியாவிலிருந்து தானத்தார், வரிபத்தார் ஆகிய இருவகையான தொழும்பாளர்களையும் அழைத்து வந்தான். இந்த தொழும்பாளர்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கும், அவர்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அவர்களை மேற்பார்வை செய்வதற்கும் மதுரையில் இருந்து தனியுண்ணாப் பூபாலன் என்பவனை அழைத்து வந்து திருகோணமலை நகரை ஆட்சி செய்யும்படியாக நியமனம் செய்தான் என கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. கோயிலுக்காக குடியேற்றப்பட்ட வன்னிமைகள் அரசியல் ரீதியாக அதிகாரமுடையோராகவும் மாறிவிட்டனர் என்பதை சமகால யாழ்ப்பாண, கண்டி இராசதானிகள் பற்றிய சான்றுகளூடாக அறியமுடிகின்றது.



© 2024, IRJTSR 

கோணேசர் கல்வெட்டின் "சுத்தமிகு வன்னிமையே குற்றஞ்செய்தால் துலங்கு விலங்கடி உயிருக்குயிரே வாங்கு....", "வையமகிழ் வன்னிமையே இன்னும் கேளாய் மனுநீதி தவறாதே கோபம் பாவம்......" (13, 14) என்ற பாடல்களில் குற்றம் செய்பவர்களுக்கு வன்னிமைகள் வழங்க வேண்டிய தண்டனைகள் பற்றியும் மனுநீதிப்படி நீதி வழங்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தவகையில் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரமும், குற்றங்களுக்கான தண்டனைகள் வழங்கும் அதிகாரமும் வன்னிமையிடம் இருந்துள்ளது எனலாம்.

திருகோணமலைப்பற்றுப் பகுதியில் அரசாட்சி புரிந்த பூபால கோத்திர வன்னிபங்கள், பூபாலக்கட்டு எனும் இடத்தில் மாளிகை அமைத்து இருந்துள்ளனர் என்று கோணேசர் கல்வெட்டு கூறுகின்றது. இலங்கையில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் தலைநகரமாக ஒரு இடத்தைத் தெரிவு செய்வது போலவே திருகோணமலைப்பற்றில் ஆட்சி புரிந்த வன்னிபங்கள்; இவ்விடத்தை தெரிவு செய்திருந்துள்ளனர் என்று கருதலாம்.

பதினான்காம் நூற்றாண்டிற்குரிய கங்குவேலிக் கல்வெட்டில் மலையில் வன்னியனார் தானம் வழங்கியதாகக் குறிப்பிடப்படுகின்றது. அதியரசர்களே தானம் வழங்குவது வழக்கமாக இருந்தாலும் இங்கு மலையில் வன்னியனார் தானம் வழங்கியதாகக் காணப்படுகின்றது. மேலும் அதியரசனின் பெயர், ஆட்சியாண்டு போன்ற செய்திகளும் குறிப்பிடப்படவில்லை. இதனூடாக இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலத்தில் திருகோணமலை வன்னிபங்கள் மீது மேலாதிக்கம் செலுத்தக்கூடிய எவரும் இருக்கவில்லை என்பதும், இவர்கள் சுதந்திர ஆட்சியாளர்கள் என்பதையும் உணரமுடிகின்றது.

'மலையில் வன்னியனாரும் ஏழூர் அடப்பர்களும் கூடி தம்பிரானார் கோணை நாதனுக்கு கங்கு வேலியில் வெளியும் புல்நடப்(பு)ம் ஆக விட்டோம்.....'

சங்கிலி மன்னனின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாண அரசினுடைய அதிகாரத்தை ஏற்றிருந்தாலும் வன்னிமைகளின் அதிகாரங்கள் குறைந்து போகவில்லை. வன்னிமை சில காலங்களில் சுயாட்சியினை மேற்கொண்டும், சில காலங்களில் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டும் அரசாட்சியினை மேற்கொண்டிருந்துள்ளனர் என்பதனை புரிந்து கொள்ள முடிகின்றது.

## 3.0 போர்த்துக்கேயரின்காலனித்துவத்தின்கீழ் திருகோணமலைவன்னிபங்கள்

போர்த்துக்கேயர் இலங்கைக் கரையை அடைந்த போது திருகோணமலை மாவட்டம் குறுநில மன்னர்களான தமிழ் வன்னியனார்களின் ஆட்சியின் கீழ் கொட்டியாரம், தம்பலகாமம், கட்டுக்குளம்பற்று, திருகோணமலை என நான்கு பிரிவுகளாக நிர்வகிக்கப்பட்டது. இந்த நான்கு பிரிவுகளில் கொட்டியாரபுரப்பற்று தொடர்ச்சியாக இன்றி மிகக் குறுகிய காலப்பகுதியில் கண்டி அரசின் மேலாதிக்கத்தை ஏற்று இருந்தது. ஏனைய வன்னியர் ஆட்சிப் பிரதேசங்கள் முழுமையான சுதந்திரத்துடன் காணப்பட்டன.

பதினேழாம் நூற்றாண்டில் திருகோணமலை நகர் முழுவதையும் போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்ததன் பின்னர் திருகோணமலையில் இருந்த நான்கு வன்னிப்பற்றுக்களில் ஒன்றான திருகோணமலைப்பற்றில் வன்னிபங்களின் ஆட்சி ஒழிந்து போனது. பின்னரான காலப்பகுதியில் ஏனைய மூன்று வன்னிப் பிரிவுகளிலுமே வன்னிபங்கள் தமது ஆட்சியதிகாரத்தினைச் செலுத்தியிருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனினும் இவர்கள் ஆண்டுதோறும் கொழும்பில் இருந்த போர்த்துக்கேயத் தளபதிக்கு யானைகளைக் கப்பமாகக் கொடுத்துள்ளனர். பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பியரால் எழுதப்பட்ட நூல்களோடு வெளியிடப்பட்ட தேசப்படங்களிலும், இலங்கையிலுள்ள இராச்சியங்கள், சிற்றரசுகள் என்பன பற்றிய இந்நூல்களின் பட்டியல்களிலும் திருகோணமலை, கொட்டியாரப்பற்று என்பன குறிப்பிடப்படுகின்றன. இங்கு திருகோணமலையில் இருந்த நான்கு வன்னிப்பற்றுக்களையும் 'அரசுகள்' என்று குறிப்பிடுகின்றது. பூஸ் போல்டே

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

அவர்களது குறிப்புக்களினூடாக கொட்டியாரப்பற்று வன்னிபங்களின் படைபலம் பற்றியும் அறியமுடிகின்றது.

## 4.0 ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் திருகோணமலைவன்னிபங்கள்

போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர்கள் 1639 இல் திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றினார்கள். இந்த படையெடுப்பு நிகழ்ச்சியில் கிழக்கிலங்கையில் போர்த்துக்கேயருக்கு எதிரான போர்களை முன்னெடுப்பதில் வன்னிபங்கள் பெரும் பங்கு வகித்தனர் என்பதனை அறிய முடிகின்றது. கொட்டியார வன்னிபம் மூலமாக கோட்டைக்குப் போகும் இரகசியப் பாதையை ஒல்லாந்தர்கள் அறிந்து கொண்டனர் (வுhழஅயளஇ 1940:8இ9). ஒல்லாந்தரால் 1665 இல் திருகோணமலையும், 1668 இல் கொட்டியாரமும் கைப்பற்றப்பட்டது.

இவர் உள்ளூர் நிர்வாகிகளாகக் காணப்பட்ட வன்னியனார்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் தானியங்கள் உள்ளடங்கிய உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் ஒல்லாந்தர்களால் தீர்மானிக்கப்படும் விலைக்கேற்பவே அவர்களுக்கு விற்கப்பட வேண்டும் எனவும், அதற்குப் பதிலாக சுதேசிகள் தாங்கள் விரும்பிய மதங்களைத் தொடர்ந்தும் கடைப்பிடித்துக் கொள்ளலாம் எனவும் கூறப்பட்டிருந்தது. மேலும் தங்கள் வர்த்தகத் தனியுரிமையைப் பாதிக்கும் விதமாக ஏனைய அந்நிய வணிகத் தொடர்புகளைச் சுதேசிகள் எவரும் வைத்திருக்கக் கூடாது எனவும் வன்னியனார்கள் மூலமாக அறிவுறுத்தப்பட்டிருந்தார்கள். இந்த உடன்படிக்கைகள் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு இரு தரப்பினராலும் பாதுகாக்கப்பட்டது.

காலப்போக்கில் ஒல்லாந்தரின் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகள் திருகோணமலையில் பரவலாக ஏற்பட்டன. கொட்டியார வன்னியனாரின் நிர்வாகத்தின் கீழ் உள்ள நிலப்பகுதிளைக் கைப்பற்றுவதற்காக 1670 ஆம் ஆண்டளவில் 22 ஒல்லாந்துப் படைவீரர்களையும், 24 லஸ்கரின்ஸ் படைவீரர்களையும் அனுப்பினார்கள். ஒல்லாந்தர்களின் படைகள் கிராமங்களுக்குள் சென்றதும் கொட்டியாரப்பற்று வன்னிபமாக இருந்த இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னிபத்தின் கொட்டியாரப்படையும், கிராம மக்களும் ஒல்லாந்தர்களுடைய படைகளைச் சுற்றி வளைத்துத் தாக்கத் தொடங்கினர். இதில் ஒல்லாந்தர் தரப்பில் 45 படைவீரர்கள் உயிரிழந்தார்கள். ஒரு ஒல்லாந்துச் சிப்பாய் மாத்திரம் உயிருடன் திரும்பினான். இதனால் கொட்டியாரத்தில் இருந்த ஒல்லாந்தப்படை திருகோணமலைக் கோட்டைக்குள் முடங்கிக் கொண்டன.

வன்னியனார்கள் குடிமக்களிடமிருந்து நேரடியாகத் தமக்கான வரிகளைப் பெற்றுக் கொண்டார்கள். ஆயினும் 1767 களில் அரசனுக்கும், வன்னியனார்களுக்கும் இடையில் வரி தொடர்பிலானதொரு உடன்படிக்கை காணப்பட்டமையினால் வன்னியனார்கள் குடிமக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் வரிகளில் இருந்து குறிப்பிட்டதொரு தொகையை அரசிற்கு கப்பமாகச் செலுத்தினார்கள். தேசாதிபதி பால்க் 1767.04.27 இல் எழுதிய நினைவுக் குறிப்பில் திருகோணமலை மாவட்ட வரிகள் தொடர்பான சில விடயங்கள் உள்ளன. கொட்டியாரப்பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமம் ஆகிய பகுதிகளில் இருந்த வன்னியனார்கள் ஒவ்வொருவரும் ஒரு யானையை மன்னருக்குக் கப்பமாகச் செலுத்தியுள்ளனர். ஒரு யானையானது ஆயிரம் பறை நெல்லுக்கு சமமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு வன்னியனார்கள் ஒல்லாந்தர்களுக்குச் செலுத்திய வரி தொடர்பாக அறிய முடிகின்றது.

ஒல்லாந்த ஆளுநரான பன் சென்டென் 15.05.1786 இல் கொட்டியாரப்பற்றுக்கு வந்த போது அவரை கொட்டியாரப்பற்று வன்னிபமாக இருந்த இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்லமாப்பாண வன்னியனார் மூதூரின் இறங்கு துறையில் வைத்து வரவேற்றிருக்கிறார். 16.05.1786 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சோடி தோம்பு தயாரிக்கப்பட்டு அதில் வன்னியனாரும்,



© 2024, IRJTSR 

தலையாரியினதும் கையெழுத்து போடப்பட்டு ஓலைத் தோம்புகள் நூலினால் கட்டப்பட்டு அதன் ஒரு பிரதி கொட்டியாரப்பற்று வன்னியனாரின் பாதுகாப்பில் வைக்கப்பட வேண்டுமென பன் சென்டென் உத்தரவிட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

கிராமத் தலைவர்களும், ஊர் மக்களும் 02.06.1786 இல் ஒரு கூட்டமொன்றில் கூடியிருந்த போது ஆளுநர் இல்லாத போது வன்னியனாரே தலைமை அதிகாரி என்றும், ஏதேனும் காரணத்திற்காக அவர் மீது புகார் அளிக்க விரும்பினால் அவர்களில் இருவர் திருகோணமலையில் உள்ள ஆளுநரைச் சந்திக்க வேண்டும் என்றும், கிளர்ச்சியில் ஈடுபடக் கூடாது எனவும், வன்னியனாருக்குத் தெரியப்படுத்தாமல் திருகோணமலை ஆளுநரைச் சந்திக்க வரக்கூடாது எனவும், ஆளுநரிடம் புகார் அளிப்பதற்கு வன்னியனார் ஒரு போதும் தடையாக இருக்கமாட்டார் எனவும் கூறியதாக தமது அறிக்கையில் பதிவு செய்திருக்கின்றார்.

ஒல்லாந்தர்களினுடைய காலனித்துவத்தின் கீழ் வன்னிபங்கள் தங்களின் பொறுப்பிலுள்ள பிரதேசத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்துள்ளனர். திருகோணமலை 20 ஆண்டுகள் மாத்திரம் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. இதற்கு முன்பு கண்டி அரசனின், வன்னியனாரின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. கீழ்ப்பட்ட நிர்வாகிகள் மேலிருந்த நிர்வாகிகளினால் தன்னிச்சையாக நிர்வகிக்கப்பட்டார்கள். குடிமக்கள் தங்கள் முறைப்பாட்டை கண்டி அரசிற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொள்ளவில்லை. டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனி நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற பின்னரும் அதே நிர்வாகமே நடந்தது. ஆனால் வன்னியனாரின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது ஆகிய விடயங்களை பன்சென்டனின் குறிப்பினூடாக வெளிப்படுத்த முடிகின்றது.

கி.பி 1670 களில் ஒல்லாந்துப் படைகளை கொட்டியாரபுரப்பற்று வன்னிபங்களும், கிராம மக்களும் சுற்றி வளைத்துத் தாக்கிய சம்பவமானது எதிராளிகளை சமமாக நின்று போராடக்கூடிய நிலையில் வன்னிபங்கள் இருந்துள்ளனர் என்பதனை விளங்கிக்கொள்ள முடிகின்றது. ஆயினும் திருகோணமலை வன்னிபங்கள் ஒல்லாந்தர்களுக்கு வரி செலுத்தியே வந்துள்ளனர். மேலும் கொட்டியாரபுரப்பற்றிலே கூடியிருந்த கூட்டமொன்றில் ஆளுநர் இல்லாத போது வன்னியனாரே தலைமை அதிகாரியாக இருப்பார் என்ற குறிப்பிலிருந்து வன்னிபங்கள் முக்கியத்துவம் பெற்ற நிலையிலேயே இருந்துள்ளனர் என்பதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

## 5.0 பிரித்தானியரின் ஆட்சிக் காலப்பகுதியில்திருகோணமலைவன்னிபங்கள்

வன்னியனாரின் குறிப்பிலிருந்து பிரத்தானியர்களின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தம்மிடம் முன்பிருந்த நீதி வழங்கும் அதிகாரமோ, குற்றங்களுக்கேற்ப தண்டனை வழங்கும் அதிகாரமோ இருக்கவில்லை என்பதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது. அலெக்சாந்தர் ஜோன்ஸ்ரைனின் குறிப்பின்படி பிரதேசத்து ஆட்சியாளர் என்ற வகையில் வன்னியருக்கு குடியானவர்கள் வசமில்லாத நிலங்கள் மீது அதிகாரம் இருந்துள்ளது. காடுகள் முதலான சொத்துக்கள் மீதான அதிகாரம் ஆட்சியாளருக்கு உரியதாகும். குடியானவர்கள் காடுகளில் உள்ள நிலங்களில் செய்கைபண்ண விரும்பினால் வன்னியனாரிடம் விண்ணப்பம் செய்து, அவரின் அனுமதியைப் பெற்ற பின்னரே காட்டினை வெட்டித் தாம் விரும்பிய அளவிலான நிலத்தைச் செய்கைபண்ணும் வழக்கம் இருந்துள்ளது. அவர்கள் செய்கை பண்ணியநிலங்களை விற்பதற்கும், ஒற்றி வைப்பதற்கும், சீதனமாகக் கொடுப்பதற்கும் உரிமை இருந்துள்ளது. இவ்வாறான காடுகளிலுள்ள நிலங்களின் மீது குடியானவர்கள் உரிமை பெற்றுக் கொண்டனர். இதனடிப்படையில் நோக்கும் போது காடுகள் மீது ஆட்சியாளரான வன்னியர் பெற்றிருந்த அதிகாரங்கள் குடியானவர்களின் சார்பில் அமைந்தவையாகும். இதனை தம்பலகாமப்பற்று, கட்டுக்குளப்பற்று தலைமைக்காரர்கள் எழுதிய அறிக்கையிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.



© 2024, IRJTSR

பிரித்தானியர்கள் ஆட்சிக் காலத்தில் வன்னிபங்களின் நிலையை நோக்குகையில் அவர்களது காலனித்துவத்தின் முற்பகுதி வரையில் வன்னிமைகள் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் பிரதேச நிர்வாகிகளாக, பரம்பரை பரம்பரையாக செயற்பட்டு வந்துள்ளனர் என்பதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

1905 ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்டம் 5 வன்னிப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவை 31 பொலிஸ் விதானைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்துள்ளது. இந்தப் பிரிவுகளுக்குள் 120 கிராமங்கள் காணப்பட்டன (சரவணபவன், 2010:239,240). பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதி வரையிலும் திருகோணமலைப் பிராந்தியத்தில் வன்னிப்பற்றுக்கள் என்ற பிரிவுகள் இருந்துள்ளமையினை நிர்வாக அறிக்கைகளின் மூலமாக அறிய முடிகின்றது. மேலும் பிரித்தானிய நிர்வாக அறிக்கைகளின்படி வன்னிப்பற்றுக்கள் நான்கும் நிர்வாக ரீதியாக இயங்கி வந்துள்ளமையினை அறிந்து கொள்ள முடிகின்றது. பிரதேச நிர்வாகிகளாக விளங்கிய வன்னிபம் என்ற பதவிக்கு பிற்பட்ட காலங்களில் பிரித்தானியர்களே சிலரை நியமித்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் திருகோணமலையில் வன்னிபங்களாக செயற்பட்ட சிலரின் பெயர்களைப் பிரித்தானியரின் ஆவணங்களில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது.

1912 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் கூடிய சபையிலே கொட்டியாரப்பற்று வன்னிபமாக டி.துரையப்பா கலந்து கொண்டிருந்தார். சின்னப்பு நமசிவாயம் என்பவர் கச்சேரி முதலியாராக இருந்து 1924 ஆம் ஆண்டில் கொட்டியாரப்பற்று வன்னிபமாக நியமிக்கப்பட்டார் (பத்மநாதன், 2002:226,245). 1939 ஆம் ஆண்டிலே திருகோணமலை நகரத்தில் ரி.சரவணமுத்து, தம்பலகாமப்பற்றில் எ.கனகசிங்கம், கட்டுக்குளப்பற்றில் எம்.இராசையா, கொட்டியாரப்பற்றில் ரி.சங்கரப்பிள்ளை ஆகியவர்கள் வன்னிபங்களாக பதவியிலிருந்துள்ளனர் (பத்மநாதன், 2002:226).

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களின் கீழ் மத்திய காலத்தில் இருந்த திருகோணமலை வன்னிமைகளின் சுதந்திரமானதொரு ஆட்சியானது பல சவால்களுக்குட்பட்டு இருந்துள்ளது. மேலும் சமூக, பொருளாதார அரசியல் நிலையில் அவர்கள் கொண்டிருந்த முக்கியத்துவம் மறைந்துபோக ஆரம்பித்த காலமாகவே இக்காலப்பகுதி காணப்படுகின்றது.

## முடிவுரை

ஐரோப்பியர்களது ஆட்சியின் ஆரம்ப காலம் வரையில் இரசியல், சமூக வழமைகளில் வன்னியர்கள் மதிப்புமிக்கவர்களாகவே விளங்கியுள்ளனர். இவ்வாறாக ஐரோப்பியர்களின் ஆரம்ப காலப்பகுதி வரையில் வன்னியர்களுக்கிருந்த அரசியல் ரீதியான முக்கியத்துவம் பிரித்தானிய காலப்பகுதியில் இல்லாது போய் சமூக நடைமுறைகளில் மட்டும் காணப்பட்டது. எனினும் காலப்போக்கில் வன்னியார்களின் அதிகாரங்கள் குறைந்து கொண்டே சென்றமையினால் சில பற்றுக்களில் கல்யாண ஒப்பந்தத்தினை வன்னியனார் முன்னிலையில் எழுதும் வழக்கமும் இல்லாது போயுள்ளது. இக்காலப்பகுதியில் வன்னியனார்களுக்கு நீதி வழங்கும் அதிகாரமோ, குற்றங்களுக்கேற்ப தண்டனை வழங்கும் அதிகாரமோ இருக்கவில்லை. பிரதேச நிர்வாகிகளாக மாத்திரம் வன்னிமைகள் பெயரளவில் இருந்துள்ளனர்.

மத்திய காலத்தில் குடியானவர்களுக்குச் சொந்தமில்லாத நிலங்களில் அதிகாரம் செலுத்தும் உரிமை வன்னியனார்களிடமே இருந்துள்ளது. நிலத்திற்கான உரிமையாளர்களாக வன்னிபங்களே இருந்துள்ளனர். இவ்வாறாக பொருளாதார ரீதியிலே முன்னிலையில் வன்னிமைகள் காணப்பட்டாலும் பிரித்தானியர் ஆட்சியில் அவர்களுக்கு கட்டுப்பட்டு வரிகளைச் செலுத்தியே இருக்கவேண்டியதொரு நிலை காணப்பட்டுள்ளது. ஆயினும் கோயில் தொடர்பாக

வன்னிமைகள் முதன்மையதிகாரம் கொண்டவர்களாகவே தொடர்ந்தும் விளங்கியுள்ளனர் எனலாம்.

மத்திய காலம் முதலாகப் பரம்பரை பரம்பரையாக வன்னியர்கள் பதவி வகித்து வந்த போதிலும் பிற்பட்ட காலங்களில் பிரித்தானியர்களே வன்னிபங்களை நியமித்து வந்துள்ளனர். சில குடும்பங்களுக்கு மட்டுமே உரித்தாக இருந்த வன்னிபங்கள் என்ற பெயரும், அதனால் குறிக்கப்படும் பதவி நிலையும் சூழ்நிலைகளுக்கேற்ற வகையிலே மாறுபட்டு இருபதாம் நூற்றாண்டு வரையிலும் காணப்பட்டுள்ளது. தற்காலத்தில் வன்னிபங்கள் என்ற பிரிவினர் இல்லாமலே போயுள்ளனர். மேலும் திருகோணமலையில் காணப்பட்ட நான்கு வன்னிப்பற்று முறைகளும் வழக்கொழிந்து போயுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் கோயில் நிர்வாகங்களில் மட்டும் இப்பற்றுக்கொரு பிரதிநிதி என்றடிப்படையில் திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம் ஆதிகோணநாயகர் போன்ற ஆலயங்களில் காணப்படுகின்றது.

மத்திய காலத்தில் வன்னிப்பற்றுக்களில் முதன்மையானவர்களாகக் காணப்பட்ட வன்னியனார்கள் ஆட்சியதிகாரங்களிலும், சமூக வழமைகளிலும், பொருளாதார நிலையிலும் முக்கியமானதொரு இடத்தினையே பெற்றிருந்துள்ளனர். ஆயினும் ஏதேச்சாதிகாரம் செலுத்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில காலப்பகுதிகளில் சில ஆட்சியாளர்களின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தாலும் தங்களது பற்றுக்களில் சுதந்திரமான ஆட்சியையே நடத்தினர். அக்காலத்தில் தமக்கென தனி இராணுவப் படையையும் வைத்திருந்தனர். ஆயினும் காலனித்துவ காலத்தின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இவர்கள் வரி செலுத்தியதுடன், அவர்களின் கட்டுப்பாட்டினுள்ளே இருந்துள்ளனர். ஆட்சியதிகாரத்தில் வன்னிமைகள் பெற்றிருந்த முக்கியத்துவம் இக்காலத்தில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது என்ற முடிவிற்கு வரமுடிகின்றது.

## உசாத்துணை


[1] வடிவேல்.இ (ப.ஆ). (1993). கோணேசர் கல்வெட்டு. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.

[2] பத்மநாதன்.சி. (2002). இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும். குமரன் புத்தக இல்லம். கொழும்பு – சென்னை.

[3] Thomas.G.P. (1940). The History of Trincomalee. Colombo: The Times of Ceylon Ltd, Colombo.

[4] சரவணபவன்.க. (2010). காலனித்துவ திருகோணமலை. திருகோணமலை வெளியீட்டாளர்கள். திருகோணமலை.